4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 302/2025 நாள்: 09.03.2026 வா.சா.1 – சிவக்குமார்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் B.Tech பட்டப்படிப்பு படித்துள்ளேன். எனது தந்தை விவசாயம் செய்து வருகிறார். எனது தந்தை கோழிப்பண்ணை தொழிலை சுமார் 20 ஆண்டுகளாக செய்து வருகிறார். எனது தந்தைக்கு பிறந்ததிலிருந்து எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு 6 ஏக்கரில் கோழிப்பண்ணை மற்றும் 21 ஏக்கர் விவசாய நிலமும், தரிசு நிலம் 14 ஏக்கரும் இருந்தது. எனது தந்தைக்கு தற்போது எவ்வித சொத்துக்களும் இல்லை, அவர் பெயரில் உள்ள சொத்துக்களை எனது பெயருக்கும், எனது சகோதரர் பெயருக்கும் எழுதி வைத்தார், எனது சகோதரர் தற்போது இறந்துவிட்டதால் அவரின் வாரிசு என்ற முறையில் எனது தந்தைக்கு சொத்து உண்டு. எனது தாயார் தற்போது உயிருடன் தான் உள்ளார். எனது தாயாரும் எனது சகோதரரின் வாரிசு என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இருந்த தரிசு நில 14 ஏக்கர் சொத்து தான் இந்த வழக்கு சொத்து என்றால் சரிதான். மேற்படி 14 ஏக்கர் சொத்தை எப்போது எனது தந்தை கிரையம் வாங்கினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தந்தை முதலில் வாங்கிய சொத்து எது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தந்தை வைத்துள்ள 6 ஏக்கர் கோழிப்பண்ணை எவ்வளவு மதிப்புடையது என்று என்னால் தற்போது சொல்லமுடியாது. எனது தந்தை கோழிப்பண்ணை நடத்துவதற்காக வங்கி கடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி வங்கி கடனுக்காக எனது தந்தையின் அனைத்து சொத்துக்களும் அடமானத்தில் இருந்தது என்றால் சாட்சி

அனைத்து சொத்துக்களும் அடமானத்தில் இல்லை, எந்த சொத்து அடமானத்தில் இருந்தது என்றும் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். தரிசு நிலம் 14 ஏக்கர் மேற்படி வங்கி கடனுக்காக அடமானத்தில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி அடமான கடன் எப்போது நீக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 2019 ம் ஆண்டு எதற்காக எனது தந்தை எனது பெயருக்கும், எனது சகோதரர் பெயருக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சாட்சி எனது தந்தைக்கு கல்லீரல் நோய் இருந்ததாலும், உடல் நிலை மோசமாக இருந்ததாலும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். எனது தகப்பனாருக்கு நான், எனது சகோதரர், எனது தாயார் தான் வாரிசு என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.09 16:49:40 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.